## வரையறுக்கப்பட்ட இலங்கை அரசாங்க தகவல் உட்கட்டமைப்பு (தனியார்) கம்பனி – 2017

வரையறுக்கப்பட்ட இலங்கை அரசாங்க தகவல் உட்கட்டமைப்பு (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விவகாரங்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அறிக்கைத் திகதிவரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், வரைபு ஆண்டறிக்கையானது நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

கம்பனியால் தயாரிக்கப்பட்ட 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினத்தின் விபரங்கள் பின்வருமாறுள்ளது.

| **சொத்துக்கள்** | **தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 41,093,545 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 255,641,188 |
| **மொத்த சொத்துக்கள்** | **296,734,733** |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 268,221,354 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 1,312,690 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **269,534,044** |
| உரிமையாண்மை | 27,200,689 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | **296,734,733** |

| | |
|---|---|
| மொத்த வருமானம் | 197,244,002 |
| மொத்த செலவினங்கள் | 197,207,314 |
| ஆண்டிற்கான மிகை | ---------------- |
| | **36,688** |
| | ======= |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

---

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 133(1) ஆம் பிரிவு மற்றும் கம்பனி அகவிதியின் 23 ஆம் பிரிவு | கம்பனியின் வருடாந்த பொதுக் கூட்டமானது 2011 யூலை 18 இல் கம்பனியினை ஸ்தாபித்ததற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சி சுற்றறிக்கையின் அத்தியாயம் 3 மற்றும் 4 மற்றும் கம்பனி அகவிதியின் 26 ஆம் பிரிவு | 2014 பெப்ரவரி 20 இற்கு பின்னர் சபைக் கூட்டம் நடைபெற்றிருக்காததுடன் இயக்குனர் சபையானது கம்பனிக்காக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அனைத்து தீர்மானங்களும் தலைமைக் கம்பனியின் இயக்குனர் சபையால் எடுக்கப்பட்டிருந்தமை என அவதானிக்கப்பட்டது. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவு | வருடாந்த பொருள் மெய்மையாய்வானது 2016 மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால், நடைமுறையல்லாச் சொத்துக்களின் உள்ளதன்மை கணக்காய்வில் தீர்மானிக்கப்பட்டிருக்க முடிந்திருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 திட்டமிடல்

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியானது கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

(ஆ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 ஆம் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்

### 3.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

கம்பனியின் அகவிதியின் பிரகாரம், லங்கா அரசாங்க வலையமைப்பு மற்றும் லங்கா நுழைவாயில் (Gate) செயற்பாடுகளின் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பிற்கு பொறுப்பாகவிருத்தல் பிரதான நோக்கங்களாக காணப்படுகின்றன. எனினும், திட்டமிடல், பெறுகைகள் மற்றும் செயற்திட்ட அமுல்படுத்தல்களை உள்ளடக்கிய லங்கா அரசாங்க வலையமைப்பு மற்றும் லங்கா நுழைவாயில் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அனைத்து செயற்திட்ட முகாமைத்துவ நடவடிக்கைகள் தலைமைக் கம்பனியால் கையாளப்பட்டது. (இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை) கம்பனியானது செயற்திட்டங்களின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை வரையறுத்திருந்தது. ஆகையால், கம்பனியானது அதனுடைய நோக்கங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு தவறியிருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 3.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையானது (ஐசீரீஏ) 2003 யூலை 16 ஆந் திகதிய, சீஎம்பி/03/0884/134/027 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தினூடாக நிதிசார் மற்றும் நிர்வாக விடயங்களுடன் தொடர்புடைய முழு வலுவுடன் வழங்கப்பட்டதுடன், இலத்திரனியல் இலங்கை நிகழ்ச்சித்திட்டத்தில் முதற்தர நன்கொடையாளராக உலக வங்கி இருந்தமையால் ஐசீரீஏ இற்கு நீடிக்கப்பட வேண்டிய அத்தகைய சுயாதீனத்திற்காக தேவையான தேவைப்பாடு குறிப்பிடப்பட்டது. எனினும், ஐசீரீஏயின் துணைக்கம்பனியாக, கம்பனியானது நடைமுறையில் திரட்டு நிதி மீது மொத்தமாக தங்கியிருந்ததுடன் முன்னதாக நிலவியிருந்த நிதிசார் மற்றும் நிர்வாக வலுவானது அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நீடிக்கின்றது. மேலும், நிதிசார் மற்றும் நிர்வாக விடயங்களுடன் தொடர்புடைய முழுமையான வலுவானது குறுகிய கால நேரத்திற்குள் பெறுபேறுகளை வழங்குவதற்காக உயர்தர தகுதி வாய்ந்த விசேடநபரின் தேவையிருந்தமையால் உலக வங்கியால் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட திட்டமிடல், கணக்குகளைத் தயாரித்தல், நிர்வாக மற்றும் மனிதவள முகாமைத்துவத்தை உள்ளடங்குகின்ற அனைத்து நடவடிக்கைகளும் தலைமைக் கம்பனியால் கையாளப்பட்டது என அவதானிக்கப்பட்டது. எனினும், கம்பனியானது பீஎம்ஐசீஎச் இல் அமைக்கப்பட்டதுடன் வருடாந்த வாடகையாக ரூபா 4.7 மில்லியன் தொகையானது செலுத்தப்பட்டிருந்தது. எல்ஜீஎன் செயற்திட்டத்தின் செயற்பாட்டு பதவியணியினராக மாத்திரம் கம்பனி இடங்களிளானது வொட்ஜிலிடப்பட்டது. எல்ஜீஎன் செயற்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்ட மற்றும் செயற்திட்ட முகாமையாளர்களுடன் தலைமைக் கம்பனியில் இடப்பட்டிருந்தனர். ஆகையால், எல்ஜீஎன் செயற்திட்டத்திற்காக தனியார் கம்பனியொன்றை உருவாக்குவதற்கான காரணம் கணக்காய்வில் ஐயத்திற்குரியதாகவிருந்தது.

### 3.3 பதவியணியினர் நிர்வாகம்

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவின் பிரகாரம், மனிதவளத் திட்டமானது மனிதவள பாதீட்டை ஒன்றுசேர்த்து கம்பனியால் தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன் இது திறைசேரியின் பொது முயற்சிகள் (பீஈடீ) திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும், அத்தகைய திட்டமொன்று இலங்கை எல்ஜீஐஐ ஆல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒவ்வொரு பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமானது 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம்

பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பதவிகளிற்காக எல்ஜீஜஜ ஆல் முறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.6 ஆம் பிரிவின் பிரகாரம், செயலாற்றல் மதிப்பீடுகளானது வழமையான அடிப்படையில் கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவில் நிர்ணயிக்கப்பட்டவாறு திறைசேரியின் அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் ஆலோசனையாளர்களுக்காக கம்பனியானது சம்பளங்கள் மற்றும் படிகளைச் செலுத்தியிருந்தது. மேலும், நிறுவகத்தின் அனைத்து ஊழியர்கள் மற்றும் ஆலோசனையாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டமில்லாமல் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(உ) செயற்திட்டங்களிற்காக ஒதுக்கப்பட்ட மூலதன ஏற்பாடுகளானது மீண்டெழும் ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்யாமல் சம்பளங்கள் கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வுக் குழுக்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 மற்றும் 7.4.2 பிரிவுகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு குழுக்களானது கம்பனியால் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் முகாமைத்துவம் | ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மதிப்பீடு, ஆவணப்படுத்தல், உரிமையாண்மை மாற்றுதல் மற்றும் பாதுகாத்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் வளங்களைப் பயன்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) மனிதவள முகாமைத்துவம் | விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் மனிதவளங்கள் முகாமைத்துவம் செய்யப்பட்டிருக்கவில்லை. |